[8th August 1966

திரு. செ. மாதவன் : இதற்கு அடிக்கல் யாரால் நாட்டப்பட்டது? இதுவும் கைவிடப்படுமா அல்லது நிறைவேற்றப்படுமா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : நாட்டும்போது இன்விட்டேஷன் அனுப்பப்படும்.

* 233 *Q.*—SRI M. KALYANASUNDARAM : Will the Hon. the Minister for Public Health be pleased to state with reference to the answer given to Question No. 465 on 29th March 1966—

(*a*) whether the construction of four additional reservoirs in Tiruchirappalli Municipal area for the supply of drinking water have been completed; and

(*b*) if so, the reasons for the delay in commissioning these reservoirs ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : (அ) ஆம். கட்டிடம் முடிவடைந்தது.

(இ) உறையூரில் (மாவட்டம் 1) உள்ள நீர்த்தேக்கம் 1965, பிப்பிரவரியில், திருச்சிராப்பள்ளி நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டது; இதை இப்போது அந்த நகராட்சியே பேணி வருகிறது. கன்டோன்மெண்ட், பாலக்கரைப் பகுதிகளிலுள்ள நீர்த்தேக்கங்கள் பயன்படுத்தக்கூடிய நிலையில் உள்ளன. அவற்றைப் பேணி வருவதற்கு மேற்கொள்ளுமாறு நகராட்சியைக் கேட்டுள்ளோம். உறையூரில் (மாவட்டம் - பி-யில்) உள்ள நீர்த்தேக்கத்திற்குத் தண்ணீர் கொண்டு செல்கிற கிளை பம்பின் மெயின் போடும் பணி முடிந்த பிறகே இந்த நீர்த்தேக்கம் பயன்படும். 'மெயின் லையினின்' ஒரு பகுதி ரயில்பாதை வழியாகச் செல்ல வேண்டியுள்ளது. ரயில் பாதைக்குக் கீழே, ரயில்வே அதிகாரிகள் இப்போது குழாய்ப் பாலம் ஒன்றை அமைத்துள்ளனர். குழாய்கள் போடும் பணி நிறைவேறி வருகிறது. விரைவில் இப்பணி முடிவுறுமென எதிர்பார்க்கப்படுகிறது.

திரு. எம். எஸ். மணி : திருச்சியில் கட்டியுள்ள நீர்த்தேக்கங்களில் குறிப்பாக உறையூரில் கட்டியுள்ள நீர்த்தேக்கம் திறப்பு விழா செய்யப்பட்டு ஒரு ஆண்டுக்கு மேலாகிறது. ஆனல் இதுவரை அங்கிருந்து தண்ணீர் சப்ளை செய்யாமல் இருப்பதற்குக் காரணம் என்ன?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம் : ரெயில்வே அத்தாரிட்டீஸ் ஒரு கல்வர்ட் கட்டிக் கொண்டு வருகிறார்கள். அது முடிந்த பிறகுதான் அத்துடன் இதைச் சேர்த்து நீர்த்தேக்கம் பயன்படும்.

* 234 *Q.*—SRI V. SANKARAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether the Government have proposed to implement any scheme for construction of the Mambazathurai Dam in Kalkulam Taluk for augmenting drinking water supply to Colachal and Padmanabhapuram Municipal areas; and

(b) if so, the details thereof?

8th August 1966]

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) &(இ) குளச்சல், பத்மநாபபுரம் நகராட்சிப் பகுதிகளில் குடிநீர் வசதியை அதிகப் படுத்துவதன் பொருட்டு, பரிசீலனை செய்யப்படவேண்டிய திட்டங் களில் மாம்பழத்துறை அணை கட்டும் திட்டமும் ஒன்றாகும். இத் திட்டத்தைப் புலனாய்வு செய்யும்பணி நிறைவேறி வருகின்றது. அது முடிவடைந்து, மேற்படி அணை கட்டுவதற்கு ஆகும் மதிப் பீட்டுச் செலவை அறிந்த பிறகுதான் தலைமைப் பொறியாளர் அவசியமான செயற்குறிப்புகளை அரசாங்கத்துக்கு அனுப்பி வைப்பார்.

* 235 Q.—SRI V. SANKARAN: Will the hon. the Minister for Public Health be pleased to state—

(a) whether the Government propose to implement any scheme for providing protected water supply to the panchayats of Chittode, Masianur, Perunthurai, Chennimalai and Ramalingam T.B. Santorium in Coimbatore district from the river Cauvery; and

(b) if so, the details thereof?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) & (இ) பெருந் துறைக்கும் சித்தோடு, நச்சியனூர் ஆகிய பஞ்சாயத்துக்களுடன் வழியிலுள்ள பிற பஞ்சாயத்துக்கள், மற்றும் பெருந்துறை இராம லிங்கம் காச நோய் நலம் பேண் மருத்துவமனை (Tuberculosis Sanatorium) ஆகிய வற்றிலும் நீர் வழங்கும் திட்டத்திற்காக தொடக்கச் செயற் குறிப்புக்கள் வரப்பெற்று, அவை பரிசீலனையில் உள்ளன.

திரு. ஏ. எஸ். தக்ஷிணாமூர்த்தி கவுண்டர்: தலைவர் அவர்களே, சித்தோடு, மசியனூர் முதலிய பிராந்தியங்களுக்கு காவேரி ஆற்றி 9-30 a.m. லிருந்து நீர் வழங்கும்போது, பக்கத்திலுள்ள பிராமண பெரிய அக்கிரஹாரம், வீரப்பன் சத்திரம் என்ற இடங்களையும் இணைக்கும் உத்தேசம் உண்டா?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார், இல்லை.

டவுன் பிளானிங் திட்டம்

* 236 கேள்வி.—**திரு. ஆ. தங்கவேலு:** கனம் சுகாதார அமைச் சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) திண்டிவனம் நகரத்தில் டவுன் பிளானிங் திட்டத்தின் கீழ் ஏதேனும் நிலம் எடுக்கப்பட்டிருக்கிறதா?

(இ) ஆமெனில், யார் யார் நிலம் எவ்வளவு எடுக்கப்பட்டிருக் கிறது?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) இல்லை.

(இ) இந்த கேள்விக்கு இடமில்லை.

திரு. ஆ. தங்கவேலு: தலைவர் அவர்களே, திண்டிவனம் நகரத் தில் டவுன் பிளானிங் திட்டத்தின்கீழ் அயன் நஞ்சை நிலங்களில் அனேக ஏக்கர்களை சர்க்கார் எடுத்திருப்பதாக கெஸட்டில் நோட்டி பிகேஷனும் வந்திருக்கிறது. ஆனால், அப்படியில்லை என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிறார்கள். இதற்கு என்ன காரணம்?